00285

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்ட கற்கைகள் திணைக்களம்

சட்டமானி பட்டப்படிப்புத்திட்டம் - மட்டம் 3

இறுதிப் பரீட்சை -2017/2018

**LWU 1201/LLU3901 – அரசியமைப்புச் சட்டம் 1**

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 20-02-2020 நேரம் : மு.ப 9.30 - ந.ப 12.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை எட்டு.(08)

ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

01. "அரசியலமைப்பை வரைந்தவர்கள், குடியரசு ஒன்றை வழங்கிய அதேவேளை ஒரு "தன்னான்மை" அல்லது உள்நாட்டில் உருப்பெற்ற" அரசியலமைப்பையும் வேண்டி நின்றனர். அவர்கள் ஏலவே இருந்த கட்டளையில் சட்டத் தொடர்ச்சியில் முறிவு அல்லது ஒரு சட்ட புரட்சியை ஏற்படுத்துவது அவர்களுடைய நோக்கமாகும்."

J.A.L. Cooray, *CONSTITUTIONAL AND ADMINISTRATIVE LAW OF SRI LANKA (CEYLON)*, (1973) P.72.

இலங்கையின் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பை ஆக்குவதில் மேலே தரப்பட்ட கூற்று சரியான முறையில் பிரதிபலிக்கின்றதா?
இயைபான அரசியலமைப்பு கோட்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புறுத்தி ஆராய்க.

(20 புள்ளிகள்)

02. அண்மையில் நடைபெற்ற தேர்தலில் ஹஸ்கி அரசின் மக்கள், ஜனாதிபதி ஒருவரை பெரும்பான்மை வாக்கின் மூலம் தெரிவு செய்தனர். அமைச்சரவை கூட்டத்தின் பின்பு ஜனாதிபதி முன்னால் ஜனாதிபதியால் பொது நோக்கம் ஒன்றிற்காக எடுக்கப்பட்ட 15 பேர்ச் காணித்துண்டொன்றை தனியார் கம்பனிக்கு விற்பதற்கான ஒரு கட்டளையை அங்கீகரித்து கையொப்பமிட்டார். பாராளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவர் புதிய ஜனாதிபதிக்கு எதிராக பின்வரும் சட்ட நடவடிக்கைகளை எடுக்க விரும்புகிறார்.

(அ) நாட்டின் உயர் நீதிமன்றத்தின் முன் ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தல் ;

(ஆ) ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றைக் கொண்டு வருதல் ;

அரசியலமைப்பு ஏற்பாடுகளின் பின்னணியில் மேலே தரப்பட்ட வலிதுடமையை ஆராய்க. ஹஸ்கி அரசின் அரசியல் யாப்பு இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பை போன்றது என கருதுக.

03. ' அரசாங்கத்தின் ஒரு கிளை ஏனைய கிளைகளை ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற நிலையை கட்டாயமாக பின்பற்ற வேண்டியதில்லை. ஒவ்வொரு கிளையும் ஏனையவற்றின் மீது ஒரு பரீட்சித்தலாக செயற்படும் என்றவாறு விடயங்கள் வடிவமைக்கப்படலாம்."

மேலே தரப்பட்ட கூற்றின் பின்னணியில் " வலு வேறாக்க" கோட்பாட்டினதுடைய பிரயோகத்தை ஆராய்க. உமது விடையை இலங்கை ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் இருந்து பெறப்பட்ட உதாரணங்களுடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

04. "பரந்த அரசியல் கோட்பாடு ஒன்றாக சட்டவாட்சியைப் பற்றி இலகுவான மற்றும் தெளிவான கூற்று ஒன்று வடிவமைப்பது சாத்தியமற்றதாகும். சமூகம் வளர்ச்சியடைகின்றவாறு, மற்றும் அரசாங்க கடமைகள் மாறுபடுகின்ற வகையில் சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் மாறுபடுகின்ற தேவைகளை சந்திக்ககூடிய வகையில் சட்டத்தின் பெறுமதிகளை தழுவ தயாராக இருத்தல் வேண்டும்."

A.W. Bradley & K.D. Ewing, *Constitutional and Administrative Law* (1997) 12th Edn p.111

சட்டவாட்சி உடைய Denis Llyod உடைய பொருள் கோடலுக்கு விசேட கவனம் வழங்கி இலங்கையில் அரசியலமைப்பு ஆட்சி அமைப்பில் சட்டவாட்சி கோட்பாட்டுடன் தொடர்புபடுத்தி மேலே தரப்பட்ட கூற்றின் வலிதுடமையை மதிப்பிடுக.
பொருத்தமான அரசியல் அமைப்பு ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டம் என்பவற்றுடன் தொடர்புபடுத்தி உமது விடையை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

05. "..1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பை போலல்லாது, பாராளுமன்றத்தினுடைய சட்டவாக்க இறைமைக் கோட்பாடு 1978 ஆம் அரசியலமைப்பின் கீழ் முதன்மையான பண்பு என்ற அம்சம் முடிவுக்கு வந்துள்ளது.

R.K.W Goonesekara and Jayantha de Almeida Guneratne, *Constitutional Law Block* I (1984) The Open University of Sri Lanka, P.1

இலங்கையின் முதலாவது மற்றும் இரண்டாவது குடியரசு யாப்புகளில் இருந்து உதாரணங்களை தந்து மேலே தரப்பட்ட கூற்றை நுணித்து ஆராய்க.

(20 புள்ளிகள்)

06. சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கை அரசியல் யாப்புகளின் கீழ் எந்தளவு தூரத்திற்கு சிறுபான்மையுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட்டன என்பதையும் அவ்வாறு மேற்கொள்ள எடுக்கப்பட்ட உபாய நுட்பங்களையும் மதிப்பிடுக.

பொருத்தமான அரசியல் அமைப்பு ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்களுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

07. கீழே தரப்பட்டுள்ளவற்றில் எவையேனும் <u>இரண்டினை (02)</u> ஆராய்க.

(அ) ஒம்புட்ஸ்மனுடைய அதிகாரங்கள் மற்றும் பணிகளுடைய வினைத்திறன்

(ஆ) இலங்கையில் தகவல் அறிவதற்கான உரிமையின் அங்கீகாரம் மற்றும் எல்லை

(இ) இலங்கையில் பொதுமக்கள் அக்கறை வழக்கு

(2 X 10 = 20 புள்ளிகள்)

08. டிஸ்னி தீவின் உடைய உயர்நீதி மன்றத்தினுடைய பிரசித்தி பெற்ற நீதிபதியான பாலித்த சமரசிங்க, நாட்டினுடைய ஜனாதிபதியினால் அவருடைய பதவியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டார். சந்தருவன் ஜயவர்தன என்ற நீதிபதியுடைய சக வகுப்பு மாணவனுடன் மேற்கொண்ட ஒரு தொலைபேசி உரையாடலின் முறையற்ற வெளிப்படுத்துகை ஒன்றை ஊடகம் ஒன்று வெளிப்படுத்தியதன் காரணமாக இது நடைபெற்றது. இதேவேளை இந்த வெற்றிடத்தை நிரப்ப மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரான நீதிபதி நதிஷா ரத்நாயக்கவை நியமிக்க தீர்மானிக்கப்பட்டது.

மேலே தரப்பட்ட நிகழ்வுகளின் அடிப்படையில் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) டிஸ்னி தீவினுடைய ஜனாதிபதி உயர்நீதிமன்ற ஜனாதிபதியான பாலித சமரசிங்கவை தனது தன்மதி அதிகாரத்தின் கீழ் நீக்க முடியுமா?

(ஆ) நீதிபதி பாலித்த ரனசிங்கவின் நீக்கத்தை தொடர்ந்து அந்த வெற்றிடத்தை நிரப்ப ஜனாதிபதி தனது விருப்பின் படி மேன்முறையிட்டு நீதிமன்ற நீதிபதியை நியமிக்க முடியுமா?

(இ) டிஸ்னி தீவின் அரசியலமைப்பு இலங்கையின் தற்போதைய அரசியல் அமைப்ப போன்றது என ஊகித்து நீதித்துறை சுதந்திரத்தின் மீது அவதானம் செலுத்தி மேலே தரப்பட்ட சூழ்நிலையில் உள்ள அரசியலமைப்பு தாக்கங்கள் மீது கருத்துரை வழங்குக.

(20 புள்ளிகள்)